நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005.

# சுற்றறிக்கை

ந.க.எண்.28882/2010/எம்2 நாள்: 23.12.2010

ஐயா,

பொருள்: நகராட்சி / மாநகராட்சிகளில் சிலை மற்றும் நினைவு வளைவு நிறுவ கருத்துரு அனுப்பப்படுவது – தொடர்பாக.

பார்வை: அரசு ஆணை 221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.11.98.

❖❖❖❖❖

நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் சிலை நிறுவ கருத்துரு அனுப்பப்படும் போது தேவைப்படும் ஆவணங்கள் அனைத்தும் முழுவடிவில் அனுப்பப்பட வேண்டும். இவ்வாறு முழுவடிவில் அனுப்பப்படாத காரணத்தால் அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது.

ஏற்கனவே சிலை நிறுவ தங்கள் நகராட்சி மற்றும் மாநகராட்சியில் இருந்து கருத்துரு அனுப்பப்பட்டு, இவ்வலுவலகத்தில் இருந்து கேட்கப்பட்ட தேவையான ஆவணங்களுக்காக கோப்பு இவ்வலுவலகத்தில் நிலுவையாக இருந்தால் இச்சுற்றறிக்கை கிடைத்த 24 மணி நேரத்திற்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு கோரப்படுகிறது.

மேலும் இனிவரும் காலங்களில் சிலைவைக்க கருத்துருக்களை அரசு ஆணை 221 நாள் 20.11.98–ன்படி கீழ்காணும் ஆவணங்களுடன் அனுப்புமாறும் அவ்வாறு கருத்துரு முழுவடிவில் அனுப்பாத ஆணையர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

நினைவு வளைவு / சிலை அமைக்க அனுப்ப வேண்டிய ஆவணங்கள் விவரம்

1. சிலை வெண்கலத்தால் செய்யப்பட்டு இருக்க வேண்டும்
2. நகர்மன்ற தீர்மானம்
3. மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை
4. காவல்துறை கண்காணிப்பாளரின் தடையின்மை சான்று
5. தேசிய நெடுஞ்சாலை அல்லது நெடுஞ்சாலை துறையின் தடையின்மை சான்று

6. சிலை அமைப்பு குழுவினரின் சிலையை அமைப்பதற்கும் அதனை பராமரிப்பதற்கு உறுதிமொழி

7. சிலை அமையவிருக்கும் இடத்தின் உரிமையாளர் அனுமதி

8. சிலை வைக்கப்படவுள்ள இடத்தின் வரைபடம்

31/12/10

நகராட்சி நிர்வாக இயக்குநருக்காக

31/12/10

பெறுநர்

1. அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்
2. அனைத்து நகராட்சி ஆணையர்கள்

நகல்

அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்